# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவ நாகரிகம் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **பகுதி - I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி - I

01) (i) கிறிஸ்தவ மறை பரப்புவதற்கு புனித பவுல் கையாண்ட வழிமுறைகள் நான்கு தருக.

(ii) திருத்தொண்டர்களின் பணிகள் நான்கு தருக.

(iii) அரசன் டயக்கிளேசியன் ஆட்சியில் எற்பட்ட கலாபனையில் வேதசாட்சிகளாக மரித்த நால்வரைக் குறிப்பிடுக.

(iv) மிலான் சாசனத்தால் திருச்சபைக்கு ஏற்பட்ட நன்மைகள் இரண்டையும் தீமைகள் இரண்டையும் எழுதுக.

(v) ஆரியுஸ் முன்வைத்த தப்பறையான போதனைகள் நான்கு தருக.

02) (i) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்திற்கு முன் நின்று உழைத்த நால்வரின் பெயரைக் குறிப்பிடுக.

(ii) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் பின் இயேசு சபையினர் கத்தோலிக்க மறையை அறிமுகம் செய்த நான்கு நாடுகளைக் குறிப்பிடுக.

(iii) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் பயனாக கத்தோலிக்க திருச்சபையில் ஏற்பட்ட ஆன்மீக மறுமலர்ச்சி தொடர்பான விடயங்கள் நான்கினை முன் வைக்குக.

(iv) மறுமலர்ச்சியின் காரணமாக மத்தியகால சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கினை முன்வைக்குக.

(v) ஜோண்கல்வின் எழுதிய "கிறிஸ்தவ மறைக் கோட்பாடு" என்னும் நூலில் அடங்கியுள்ள நான்கு பகுதிகளையும் குறிப்பிடுக.

03) (i) போர்த்துக்கேய மிசனரிமாரின் முயற்சிகள் வெற்றியளித்தமைக்கான காரணங்கள் நான்கு தருக.

(ii) ஆங்கிலேயர் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த பெண் துறவறசபைகள் நான்கு குறிப்பிடுக.

(iii) பிரான்சிஸ்கன் சபையினரால் நடாத்தப்பட்ட கல்வி முறையின் குறைபாடுகள் நான்கு தருக.

(iv) இந்திய ஐக்கிய லூத்தரன் சபையில் காணப்படும் திருச்சபைகள் நான்கு குறிப்பிடுக.

(v) இலத்தீன் திருச்சபையின் வழிபாட்டு முறையில் காணப்படும் விசேட அம்சங்கள் நான்கு குறிப்பிடுக.

## பகுதி - II

04) திருச்சபையின் ஆன்மீக சமூக மறுமலர்ச்சிக்கு துறவற சபைகள் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன.

(i) புனித பக்கோமியஸ், புனித பசில் போன்றவர்கள் துறவற வாழ்வுக்கென ஒழுக்க சட்டங்களை வரையறுத்த விதத்தை விபரிக்குக.

(ii) குளுனி துறவறசபை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தைக் குறிப்பிட்டு, இவ் இலத்தீன் வழி பிரகாசித்த சிறப்புப் பண்புகளை விளக்குக.

(iii) வல்தேசியன் துறவறசபை உருவாக ஏதுவான சூழ்நிலையை விளக்குக.

(iv) ஆசீர்வாதப்பர் துறவறசபையின் முன்மாதிரிகையான உடல் உழைப்பு ஐரோப்பிய நாகரிகம் உருவாகுவதற்கு உதவிய விதத்தை விளக்குக.

05) திருச்சபையின் உருவாக்கமும் செயற்பாடுகளும் இறைவனின் மீட்புத் திட்டமே என எண்பிக்கின்றது.

(i) பெந்தக்கோஸ்து நிகழ்வை பாபேல் கோபுர நிகழ்வுடன் ஒப்பிட்டு விளக்குக.

(ii) பவுலின் முதலாம் மறைபோதக பயணம் பற்றி விளக்குக.

(iii) உரோமைக் கலாபனை ஏற்பட்டதற்கான காரணங்களை விளக்குக.

(iv) நெஸ்தோரியபேதகம் பற்றி சிறு விளக்கவுரை தருக.

06) ஐரோப்பியரது கீழைத்தேச வருகையினால் கிறிஸ்தவம் விரைவாக பரவியது

(i) மத்திய ரிச்சி அடிகளாரின் மறைத்தூதுப் பணியின் முக்கிய அம்சங்களை விளக்குக.

(ii) கொரிய கிறிஸ்தவ சபைகள் எதிர்கொண்ட இரு துன்பகரமான நிகழ்வுகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(iii) பிலிப்பைன்ஸ் நாடு அமெரிக்கருடைய ஆட்சியின் கீழ் வந்ததும் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி சிறு விளக்கவுரை எழுதுக.

(iv) யப்பானில் கிறிஸ்தவ மறைபரப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை விளக்குக.

07) ஐரோப்பிய படையெடுப்புடன் இலங்கை வரலாற்றிலே ஒரு புதிய காலப்பகுதி உருவாகியது.

(i) போர்த்துக்கேயர் வருகையின் போது இலங்கையின் அரசியல், சமய நிலையை விளக்குக.

(ii) போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கருக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்களை விளக்குக.

(iii) ஒல்லாந்தரின் மதம், கல்வி சார்ந்த பணிகளை விளக்குக.

(iv) சமூக நலன் தொடர்பாக இன்றைய திருச்சபை ஆற்றும் பணிகளை விளக்குக.

08) உலக நாகரிகமும் கிறிஸ்தவ நாகரிகமும் ஒன்றின் முன்னேற்றத்திற்கு மற்றயது பங்களிப்புச் செய்துள்ளன.

(i) மொசப்பத்தேமிய நாகரிகம் பற்றி விளக்குக.

(ii) பாலஸ்தீன நாட்டில் கிரேக்கரின் ஆட்சி பற்றி சுருக்கமாக விளக்குக.

(iii) 'கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படை கிறிஸ்துவே' என்பதனை விபரிக்குக.

(iv) கிறிஸ்தவத்தின் ஆரம்பத்தால் எவ்வாறு புதிய சமூகம் உருவாக்கப்பட்டது என்பதனை விளக்குக.